மலர் : 10 **இயேசுகிறிஸ்துவே கர்த்தர்** இதழ் : 7

தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रड विलज मिनस्ट्री

ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

**மே 2010**

| ஆண்டுசந்தா | இந்தியா ரூ.25 | வெளிநாடு ரூ.250 |
|---|---|---|

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை




**TVGM - 2010 மே**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

## நீ எழும்பி காரியத்தை நடப்பி; கர்த்தர் உன்னோடே இருப்பாராக.

1 நாளா. 22 : 16




கர்த்தருடைய கிருபையினால் TASOL ஸ்தாபனமானது 17.03.2010 அன்று பதிவு செய்யப் பட்டது. 18.03.2010 அன்று பாஸ்டர் ஜோசப் ஜெபமணி முதல் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்டு, ஜெபித்து ஆரம்பித்து வைத்தார்கள்.

**சகல துதியும், கனமும், மகிமையும் நம் இயேசு ஒருவருக்கே!**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## TAMIL VILLAGE GOSPEL MISSION

**CHIEF EXECUTIVE OFFICER Letter Dated:13.04.2010**



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும், இரக்கத்தினாலும், உங்கள் ஜெபத்தினாலும் என்னுடைய திருமணம் 28.05.2010 வெள்ளி மாலை 5 மணிக்கு சென்னை **தூய ஜார்ஜ் கதீட்ரல் தேவாலயத்தில்** நடைபெறுகிறது. ஜெபியுங்கள். இப்பொழுதே திட்டமிடுங்கள். கட்டாயமாக திருமணத்தில் குடும்பமாக கலந்து கொள்ளுங்கள். இதையே என்னுடைய தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஒரு வேளை திருமணத்திற்கு சென்னைக்கு வர முடியாவிட்டால் தயவுசெய்து கடைசி பக்கமுள்ள விபரத்தின்படி நடைபெறும் வரவேற்பு நிகழ்ச்சியிலாவது கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் TASOL Trust ஆனது 17.03.2010 அன்று திருச்சி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு, **பாஸ்டர் ஜோசப் ஜெபமணி** அவர்களாலும், தேனி **'இயேசு பண்ணை'** திரு. **தட்சணாமூர்த்தி** அவர்களாலும் விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இன்று 13.04.2010 வரை மூன்றில் இரண்டு பங்கு நிலங்கள் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. கர்த்தரைத் துதியுங்கள்.

மார்ச் மாதத்தில் 4 கிராமங்களில் ஜெபவீடுகள் பிரதிஷ்டை செய்யப் பட்டது. கர்த்தருக்குச் சித்தமானால் மே மாதத்தில் ஒரிஸாவில் 5 ஜெபவீடுகள் பிரதிஷ்டை செய்ய வாஞ்சிக்கிறோம். ஜெபியுங்கள்.

2010 ஏப்ரல் 30, மே 1 ஆகிய 2 நாட்களும் மாலை 6 மணிக்கு **100**–கிராம ஊழியர்கள் மற்றும் TVGM கிளை அலுவலகம், சிறுவர் இல்லப் பிள்ளைகள் யாவரும் இணைந்து TVGM ஆண்டுவிழாவை கொண்டாட ஒழுங்கு செய்துள்ளோம். வழக்கம்போல் மே 1 பகல் முழுவதும் துதிஆராதனை உண்டு. திருச்சி ஆத்துமநேசர் பாஸ்டர் அந்தோணி அனைவருக்கும் சிறப்பு ஜெபம் ஏறெடுப்பார்கள். வாருங்கள். தேவ ஆசீர்வாதம் பெறுங்கள்.

2010 மே 3ம் தேதி சகோ.ஆரோக்கியம் மகளும்,அலுவலக சகோதரி யுமாகிய ஷோபியா திருமணம் அகினேஷ்புரத்தில் நடைபெறும். ஜெபியுங்கள்.

**கிறிஸ்துவின் பணியில்,**

**ஸ்டீபன் கிறிஸ்டோபர்**

# 1 நாளாகமம் 22:16. நீ எழும்பி காரியத்தை நடப்பி ; கர்த்தர் உன்னோடே இருப்பாராக.

2010 மே மாதம் கர்த்தருடைய வாக்குத்தத்தத்திற்காக ஆவலோடு காத்திருக்கும் அன்பு சகோதர, சகோதரிகளே!

இம்மாதம் கர்த்தர் உங்களுக்கு கொடுக்கும் வாக்குத்தத்தம் :

**1 நாளா. 22:16**

**நீ எழும்பி காரியத்தை நடப்பி ; கர்த்தர் உன்னோடே இருப்பாராக.**

இந்த மாத வாக்குத்தத்தத்தை ஆழ்ந்து சிந்திக்கும்போது, நாம் தைரியமாகி இந்த மாதம் ஆரம்பித்த வேலையை செய்ய தொடங்குவோம்.

நீங்கள் ஆரம்பித்த வேலை வியாபாரமாகவோ, உத்தியோக மாகவோ அல்லது எதுவாக இருந்தாலும் கர்த்தர் அந்த வேலையை வெற்றிகரமாக நிறைவேற்ற உங்களுடனே இருந்து உதவுவார்.

**1 நாளாகமம் 22ம்** அதிகாரத்தில் முன்னும் பின்னும் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட தன் கடைசி காலத்தில் தாவீதின் முயற்சிகளை வாசிக்கிறோம். ஆனால் **1 நாளாகமம் 22:10ல்** **“சாலமோன் என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் எனக்குக் குமாரனாயிருப்பான், நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன்; இஸ்ரவேலை ஆளும் அவனுடைய ராஜாங்கத்தின் சிங்காசனத்தை என்றென்றைக்கும் நிலைப்படுத் துவேன்”** என்று கர்த்தர் சொல்வதை வாசிக்கிறோம்.

ஆலயத்தைக் கட்டும் வேலையை மகனிடம் கொடுக்கும்படி தாவீதோடு கர்த்தர் பேசிய போது, **1நாளா.22:11**ன் படி தாவீது **“இப்போதும் என் குமாரனே, நீ பாக்கியவானாயிருந்து, கர்த்தர் உன்னைக் குறித்துச் சொன்னபடியே உன் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்தைக் கட்டும்படி, அவர் உன்னுடனேகூட இருப்பாராக”** என்று சொல்கிறார்.

**ஆகவே மூன்று காரியங்களை நீங்கள் மனதிலே கொள்ள வேண்டும்.**

**1. கர்த்தருடைய கரம் உங்களுடனே இருக்க வேண்டும்.**

**2. கர்த்தர் உங்களுக்கு முன்பாக செல்ல வேண்டும்.**

**3. கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்க வேண்டும்.**

**முதலாவதாக,** திட்டங்கள் செய்து நீங்கள் வேலையை ஆரம்பிக்கும் போது, கர்த்தர் உங்களுடனே இருக்க வேண்டும். நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் கர்த்தரின் கரம் உங்களை திடமாக தாங்க வேண்டும். அவரின் கரம் உங்களுடனே இருக்கும்போது மட்டுமே ஆண்டவரின் அன்பையும் மகத்துவத்தையும் நீங்கள் செய்வதில் எல்லாம் அனுபவிக்க முடியும். நீங்கள் ஜெப பரம்பரையினரும், ஆண்டவரை உங்கள் வாழ்க்கையின் ஒரு பாகமாகவும் கொண்டிருக்க வேண்டும்.

**அடுத்தபடியாக, ஆதி. 39: 2ல்**

"**கர்த்தர் யோசேப்போடே இருந்தார், அவன் காரியசித்தியுள்ளவனானான்**"

என்று வாசிப்பது போல் கர்த்தர் உங்களை இந்த மாதம் ஆரம்பித்த வேலையில் காரியசித்தி உள்ளவர்களாக்குவார்.

அதைப் போலவே மோசேயின் வாழ்க்கையைப் பற்றி வாசிக்கும்போது, அவர் தான் திக்குவாயும், மந்த நாவும் உள்ளவன் என்கிறார். ஆனால் **யாத்.4:12ல்** கர்த்தர் "**நீ போ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன்**" என்றார். கர்த்தர் உங்கள் பலவீனங்களை, பலமாக தன் பார்வையிலே காண்கிறார். ஆகவே உங்கள் பலவீனங்களைப் பற்றி கவலைப்படாதீர்கள். கர்த்தரை நம்புங்கள்.

மேலும் **யாத். 33: 14ல் "என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்"** என்று வாசிக்கிறபடி கர்த்தருடைய சமுகம் மோசேக்கு முன்பாக சென்றது. அதை போலவே நீங்கள் ஆரம்பித்த வேலையை செய்யும்போது, கர்த்தருடைய கர்த்தருடைய சமுகம் உங்கள் முன்பாக செல்வது தேவைப்படுகிறது.

**இரண்டாவதாக,** நீங்கள் ஆரம்பித்த வேலையை செய்யும்போது, கர்த்தரின் சமுகம் உங்களுக்கு முன்பாக செல்ல வேண்டும். கர்த்தருடைய சமுகம் உங்களுக்கு முன்பாக செல்லும்போது மட்டுமே பிசாசுகள் கட்டப்பட்டு, கர்த்தர் உங்களுக்கு தேவையான வெற்றியைத் தருவார்.

**எண்ணா. 14:14ல் "கர்த்தராகிய நீர் இந்த ஜனங்களின் நடுவே இருக்கிறதையும், கர்த்தராகிய நீர் முகமுகமாய்த் தரிசனமாகிறதையும், உம்முடைய மேகம் இவர்கள்மேல் நிற்கிறதையும். பகலில் மேகத் தூணிலும், இரவில் அக்கினித் தூணிலும், நீர் இவர்களுக்கு முன் செல்லுகிறதையும் கேட்டிருக்கி றார்கள்; இந்த தேசத்தின் குடிகளுக்கும் சொல்லுவார்கள் ".**

**ஏசாயா 45: 2,4ல் "நான் உனக்கு முன்னே போய், கோணலான வைகளைச் செவ்வையாக்குவேன். வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கி ஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்; நான் என் தாசனாகிய யாக்கோபினிமித் தமும், நான் தெரிந்து கொண்ட இஸ்ரவேலினிமித்தமும், நான் உன்னைப் பெயர்சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும் உனக்கு நாமம் தரித்தேன்."** என்று வாசிப்பதுபோல், அவர் பெயரை அழைக்கும்போது, கர்த்தர் உங்கள் முன்னால் போவார். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அவருடைய பெயரை மட்டுமே அழைக்க வேண்டும்.

**மூன்றாவதாக, ஆதி.26:12ல் "ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்."** என்று வாசிப்பது போல கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கும் போது, நீங்கள் உங்கள் வாழ்க்கையில் நூறு மடங்கு ஆசீர்வாதத்தை காண்பீர்கள். அதை போலவே கர்த்தர் நாம் செய்யும் எல்லாவற்றிலும் நம்மை ஆசீர்வதிப்பார். கர்த்தர் உங்களை ஆசீர்வதிக்கும்போது உங்களுக்கு வர வேண்டியதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

**பக்தன் பாடுகிறான் :**

***கர்த்தரின் கரம் அது கர்த்தரின் கரம்***
***என்னோடு இருப்பது கர்த்தரின் கரம்***
***அது கர்த்தரின் கரம்***
***மோசேயோடிருந்தது கர்த்தரின் கரம்***
***ஆபிரகாமோடிருந்தது கர்த்தரின் கரம்***
***செங்கடலை பிளந்தது கர்த்தரின் கரம்***
***யோசுவாவோடிருந்தது கர்த்தரின் கரம்***

கர்த்தரைத் துதித்து இப்பாடலை இந்த மாதத்தில் தொடர்ந்து பாடிக் கொண்டே உங்கள் விசுவாசத்தை அறிக்கையி டுங்கள். நீங்கள் ஆரம்பித்த வேலையில் சித்தியடைய கர்த்தர் உதவி செய்வார். நீங்கள் எதைக் குறித்தும் கவலைப் படாதீர்கள். ஜெபியுங்கள். கர்த்தரின் கரம் நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் இருப்பதைக் காண்பீர்கள்.

**தேவனுக்கே மகிமை!**

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் **'வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்'** இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## திருவள்ளூர் மாவட்டம் - தூய தாமஸ் மவுண்ட்

# 100 - கிராம ஊழியம்

**நோக்கம்: 2010 மே 24** திங்கள் காலை 9 மணி முதல் **மே 28** வெள்ளி மதியம் 12 மணி முடிய **தாமஸ் மவுண்ட் யூனியன் கிராமப் பகுதிகளில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2010 மே 24** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2010 மே 28** வெள்ளி மதியம் **12** மணி முடிய

**( 2010 மே 24 - 28 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**பாஸ்டர் அந்தோணி,**

**CYBOCS சர்ச்,**

**2,நல்ல தம்பி தெரு, திருநகர்,**

**நாகல்கேணி, குரோம்பேட்டை,**

**சென்னை - 44. செல்: 9941355920.**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர் அந்தோணி** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**பிரயாணப்படி :** தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**முக்கிய அறிவிப்பு :** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**சகல தொடர்புகளுக்கும் :** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# ஈரோடு - அம்மாபேட்டை யூனியன் 100-கிராம ஊழிய அறிக்கை

## நாள்: 15.03.2010 – 19.03.2010

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஈரோடு மாவட்டம் – அம்மாபேட்டை யூனியனில் 15.03.2010 முதல் 19.03.2010 வரை **"100 கிராம ஊழியம்"** மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

ஊழியத்தின் முதல் நாள், கடைசி நாள், கூடுமிடம், உணவு, இனிப்பு, பார்சல் செலவுகளை அம்மாபேட்டை **G.F.W. சபை போதகர் பால் விக்டர்** அவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.





தமிழ் நாட்டின் பல மாவட்டங்களிலிருந்து 56 கிராம ஊழியர்கள் கலந்து கொண்டு ஊழியம் செய்தார்கள். முதல்நாள் ஜெபத்தில் அம்மாபேட்டை யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களையெல்லாம் வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப் பட்டது. இந்த ஜெபத்தில் **போதகர் பால் விக்டர்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள்.





பின்பு கிராம ஊழியர்களை 12 குழுவாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தனித்தனியே தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். G.F.W. சபையின் சார்பாக கிராம ஊழியர்களுக்கு மதிய உணவு அளிக்கப்பட்டது. பின்பு ஊழியர்கள் ஜெபத்துடன் கிராமங்களுக்குள் கடந்து சென்று, 5 நாட்கள் கிராமங்களில் தங்கியிருந்து வீட்டிற்கொரு சுவிசேஷப் புத்தகம் இலவசமாக கொடுத்து, **இயேசுவே கர்த்தர்** என்று அறிவித்தார்கள்.



ஊழியங்களை முடித்து மீண்டும் ஊழியர்கள் முன்பு கூடிய இடத்தில் கூடி ஜெபித்து கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படியாக நடத்தினார் என்பதை சாட்சியாகக் கூறி தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்த ஜெபத்தில் TVGM ஸ்தாபகர் சகோ. P.T. கிறிஸ்டோபர் அவர்கள் கலந்துகொண்டு, ஊழியர்களை ஜெபத்தில் நடத்தினார்கள். **போதகர் பால் விக்டர்** தேவசெய்தி கொடுத்தார்கள். ஊழியர்களுக்கு பிரயாணப் படியும், இனிப்பும் வழங்கப்பட்டது. இரவு உணவுக்குப் பின் அவரவர் தங்கள் ஊருக்கு திரும்பிச் சென்றார்கள்.

இந்த ஊழியத்தின்போது 11,388 **லூக்கா சுவிசேஷப் புத்தகங்கள்,** 20,000 **இயேசுவே இரட்சகர்** கைப்பிரதிகள், 10,000 சிலுவைக்கொடிகள் இலவசமாக வழங்கப்பட்டது.15 0 புறமத நண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து தபால் மூலம் வேதபாடங்களை அனுப்பும்படி கேட்டுக் கொண்டார்கள்.

## கிராம ஊழியர்களின் அனுபவ சாட்சிகள்

### குழு 1: சகோதரி விமலா, கஸ்தூரி, மரியாள், மேரி மீனா.

நாங்கள் வீடுகள்தோறும் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, சத்தியத்தை அறிவித்தோம். சிலர் எங்களை கடினமாகப் பேசி புத்தகங்களை வாங்க மறுத்து விட்டார்கள். ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டவர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள் 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

### குழு 2: சகோதரி ராணி சந்திரா, லூாயிஸ் அம்மாள், ஜோதிமணி, அமிர்தகனி.

**காந்திநகர்** பகுதியில் ஊழியம் செய்தபோது, தையல் தொழில் செய்கிற பெண்களைச் சந்தித்து, சுவிசேஷம் அறிவித்தோம். இவர்களில் ஒரு பெண் தனக்கு மனசமாதானம் இல்லை, தொழில் ஆசீர்வாதமில்லை என்று ஜெபிக்கக் கூறினாள். மொத்தம் 1000 சுவிசேஷப் புத்தகங்கள் 850 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

### குழு 3: சகோ.பிரேம்ஆனந்த், யோசுவா, நோவா, வின்சென்ட், அன்பு சாமுவேல்.

கிராமங்களில் மக்கள் நாங்கள் கொடுத்த சுவிசேஷப் புத்தகங்களை விருப்பத்துடன் வாங்கிக் கொண்டார்கள். இவர்கள் அனைவருக்கும் மனந்திரும்புதலையும், பாவமன்னிப்பின் அவசியத்தையும் எடுத்துச் சொல்லி இயேசு என்ற கடவுள் இதை இலவசமாக தருவார் என்று சொன்னபோது, ஏற்றுக்கொண்டனர். ஒரு வீட்டில் அவர்களுடைய மகன் 14 வருடம் சிறை தண்டனை பெற்று ஜெயிலில் இருப்பதாக ஜெபிக்கச் சொன்னார்கள். ஜெபித்து கடந்து வந்தோம். மொத்தம் 1030 லூக்கா புத்தகங்கள், 810 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

### குழு 4: சகோ.மாற்கு மாரியப்பன், செல்வராயர்பால், மகாராஜன், ஜோசப் முரளிதரன், அருண்ராஜ், இஸ்தாக்கி.

**குரும்பனூர்** கிராமத்திற்கு சென்று நாங்கள் ஊழியங்களை செய்து சுவிசேஷ

புத்தகங்கள், கைப்பிரதி, சிலுவைக் கொடிகளை கொடுத்து, **இயேசுவே கர்த்தர்** என்று அறிவித்தோம். சில வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 758 லூக்கா புத்தகங்கள், 840 சிலுவைக்கொடிகள் கொடுக்க கர்த்தர் கிருபை செய்தார்.

**குழு 5: சகோதரி மணியம்மாள், சலோமி சம்மனசு, ரோணிக்கம், அந்தோணிமேரி.**

**குளத்துார், உக்கம்பருத்திக்காடு, பூதப்பாடி, அண்ணாநகர்** ஆகிய கிராமங் களில் சுவிசேஷம் அறிவித்து வீடுகள் தோறும் புத்தகம் கொடுத்தோம். கேன்சர் வியாதியால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு போலீஸ்காரருக்கு இயேசுவைப் பற்றிக் கூறி ஜெபித்தோம். மொத்தம் 1000 லூக்கா புத்தகங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 6: சகோதரி டோரா லாசர், அமிர்தம், ஷீலா, சாந்தி ஸ்டேன்லி.**

கிராமங்களில் இயேசுவை அறியாத மக்கள் பலரை கண்டு சுவிசேஷத்தை அறிவித்தோம். வீடுவீடாக சென்று சுவிசேஷ புத்தகம் கொடுத்தோம். பைக்கில் ஒருவர் வந்து எங்களிடம் நீங்கள் கொடுத்த புத்தகம் எனக்கு வேண்டாம் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று திரும்பக் கொடுத்தார். சிலர் எங்களை ஜோசியம் சொல்லுகிறீர்களா என்று கேட்டார்கள். மொத்தம் 1000 லூக்கா புத்தகங்கள், 800 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 7:சகோ.பால்ராஜ்,அந்தோணி. சூசைமாணிக்கம், ஸ்டீபன்ராஜ், ஜோசப் தார்சிஸ், பாபு சாலமோன்.**

**படலுார்** ஊராட்சியிலுள்ள கிராமங்களில் சென்று சுவிசேஷ புத்தகம் கொடுத்தோம். **குட்டமேடு** கிராமத்தில் பிசாசின் பிடியில் இருந்த ஒருவருக்காக ஜெபித்தோம். **பூசாரியூர்** கிராமத்தில் இந்துகோவில் பூசாரி ஒருவர் சுவிசேஷம் அறிவிக்க கடும் எதிர்ப்பு தெரிவித்தார். **பச்சாம் பாளையம்** கிராமத்தில் ஒரு பெண் எங்களை சுவிசேஷம் சொல்லக் கூடாது என்றும், மீறினால் உங்களை அடித்து விரட்டுவேன் என்றும் பயமுறுத்தினாள். எங்களுக்கு ராமர் நாமம் தான் பிடித்தமானது என்று சொல்லி எங்களை துரத்தினாள். ஆனாலும் நாங்கள் அந்த கிராமம் முழுவதும் புத்தகம் கொடுத்து, இயேசுவின் அன்பை அறிவித்தோம். மொத்தம் 1000 லூக்கா புத்தகங்கள், 820 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 8: சகோ. செல்வராஜ், பீட்டர், இஸ்ரவேல், ஜெபமலைநாதன், தாவீது, எபிநேசர், ஜான் டேனியல்.**

**வாய்க்காமேடு** கிராமத்திற்கு சென்று லூக்கா புத்தகம் கொடுத்தோம். யாவரும் எந்த எதிர்ப்பும் இல்லாமல் வாங்கிக் கொண்டார்கள். இங்குள்ள மக்கள் இயேசுகிறிஸ்துவின் மேல் விசுவாசமுள்ளவர்களாக இருந்து அநேகர் இயேசுவே மெய்யான கடவுள் என்பதை ஏற்றுக் கொண்டார்கள். மொத்தம் 800 லூக்கா புத்தகங்கள், 850 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**குழு 9: சகோதரி மரியம்மாள், கிரேஸ் பத்மா, எஸ்தர் பேபி, அபியேல் அந்தோணியம்மாள்.**

**பர்கூர், ஊசிமலை, பெஜ்ஜில்பாளையம்** ஆகிய மலை கிராமங்களில் மலைவாழ் மக்கள் மத்தியில் சுவிசேஷப்புத்தகங் களைக் கொடுத்து, இயேசுவே கர்த்தர் என்று அறிவித்து வந்தோம். இங்குள்ள மக்கள் எங்களுக்கு தண்ணீர் கொடுத்தால் தீட்டு என்று குடிக்க தண்ணீர்கூட தர மறுத்து விட்டார்கள். இவர்களின் இரட்சிப்பிற்காக ஜெபித்து

வந்தோம். ஒரு பெரியவரிடம் இயேசுவைப் பற்றி சொன்ன போது, போங்கம்மா உங்க இயேசு அவரையே காப்பாற்றிக் கொள்ள முடியாமல் சிலுவையில் மாண்டு போனார். அவரைப் பற்றி எங்களிடம் சொல்லி ஏன் எங்கள் உயிரை வாங்குகிறீர்கள் என்று எரிச்சல்பட்டார். மொத்தம் 750 லூக்கா புத்தகங்கள், 820 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 10: சகோதரி ரூத் மேரி, அன்னக்கிளி, ஜெபமணி, தெபோராள்**

நாங்கள் சென்ற கிராமங்களில் அநேகர் சுவிசேஷப் புத்தகங்களை வாங்க மறுத்தார்கள். ஊழியத்திற்கு அதிகமான எதிர்ப்புகள் நிறைந்த கிராமங்களாக இருந்தது. **சித்தேஸ்வரன்மலை** என்ற கிராமத்தில் ஒருவன் குடிபோதையில் எங்களை மிகவும் அசிங்கமான வார்த்தைகளால் பேசினான். இங்கு இயேசுவைப் பற்றி எதுவும் சொல்லி நிற்காதீர்கள், ஓடிப் போங்கள் என்று விரட்டினான். நாங்கள் வேறு கிராமத்திற்கு போனோம். மொத்தம் 1025 லூக்கா புத்தகங்கள், 805 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 11: சகோதரி எஸ்தர், கிளமெண்ட்ஸ்மேரி, பிச்சையம்மாள், கிருபா பழனியம்மாள்,**

**சித்தார்** என்ற கிராமத்தில் வீடுகளில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, அநேகர் வாங்கி வாசித்தார்கள். சிலர் வேண்டாம் என்றார்கள். வேறு சிலர் எங்க ஊர், எங்க சாமி எங்களுக்குப் போதும் நீங்கள் போங்கள் என்று விரட்டினார்கள். வேறு சிலர் எல்லா கடவுளும் ஒன்று தான் என்று வாதாடினார்கள். இவர்களுக்கு இயேசு தான் மெய்யான கடவுள் என்று கூறினோம். நாங்கள் 10 கிராமங்களில் ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். மொத்தம் 1020 லூக்கா புத்தகங்கள், 830 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 12: சகோதரி ரூத் கலாவாணி, ரெபேக்காலட்சுமி, அன்னாள், தேவபாக்கியம்.**

**சிங்கம்பேட்டை** ஊராட்சியிலுள்ள கிராமங்களுக்கு சென்று சத்தியத்தை அறிவித்தோம். ஊழியத்தின்போது 10ம் வகுப்பு பரீட்சை எழுதப் போகிற சுமார் 60 பிள்ளைகளுக்கு சுவிசேஷத்தைக் கூறி ஜெபித்தோம். மக்கள் கடின இருதயமுள்ளவர்களாக இருக்கிறார்கள். சுவிசேஷப் புத்தகங்களை மிகவும் கஷ்டப்பட்டு கொடுத்தோம். மொத்தம் 1005 லூக்கா புத்தகங்கள், 925 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை**


**2010 மே மாத இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : பெரம்பலூர்
யூனியன் : வேப்பூர்
நாள் : 15.05.2010
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர் S. பர்னபாஸ்**
**நித்திய ஜீவஒளி ஜெபவீடு**
**மின்நகர்**
( செல்வம் என்ஜினியரிங் ஒர்க்ஸ் அருகில் அரியலூர் செல்லும் ரோடு )
**நாலு ரோடு**
**பெரம்பலூர் - 621 220.**
செல்: 9362642456
99432 81640

# கன்னியாகுமரி மாவட்ட
# TVGM அறிமுகப்பணி அலுவலகம்
# 2010 மார்ச் மாத ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2010 மார்ச் மாத ஊழியங்களை கர்த்தர் அதிசயமாய் நடத்தித் தந்தார். கன்னங்குளம் சி.எஸ்.ஐ. சபையில் அறிமுகப் பணி செய்ய கர்த்தர் கிருபை செய்தார். சபை குருவானவர் Rev. செல்வம் அவர்கள், சபை கமிட்டி மற்றும் சபை அங்கத்தினர்கள் யாவரின் அன்பான ஒத்துழைப்பை கர்த்தரே தந்தார்.

2010 ஏப்ரல் 14ம் தேதி அஞ்சுகிராமம் பகுதியில் தரிசன முகாமிற்கான ஏற்பாடுகளை செய்ய கர்த்தர் கிருபை செய்தார். இந்தப் பத்திரிக்கை தங்கள் கரங்களில் கிடைக்கும்போது தரிசனமுகாம் ஆசீர்வாதமாக முடிந்திருக்குமென நம்புகிறோம்.

மேலும் பஸ் விபத்தில் சிக்கின இரண்டு ஊழிய சகோதரிகளுக்கும் எந்த ஆபத்தும் இல்லாமல் கர்த்தர் சுகமாய் காத்துக் கொண்டார். கர்த்தர் செய்த எல்லா நன்மைகளையும் எண்ணி இந்த ஊழிய அறிக்கையை ஒரு சாட்சியாக தேவனுடைய நாம மகிமைக்காக எழுதுகிறேன். **தேவனுக்கே மகிமை!**

கிறிஸ்துவின் பணியில்,
ஷோபனா இவான்சலின்.

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001 செல்: **98658 26424** போன் : **04652 - 277251**

## நாகர்கோவில்
## அறிமுகப்பணி அலுவலகத்திற்கு ஆட்கள் தேவை!

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிறிஸ்தவர்களுடைய வீடுகளுக்கு இரண்டு இரண்டுபேராக சென்று ஜெபித்து, கிராம ஊழிய வளர்ச்சிக்காக உண்டியல் மற்றும் காணிக்கைகளை சேகரித்து, TVGM சார்பில் ரசீது கொடுத்து அவர்கள் தேவைகளுக்காக ஜெபித்து, ஆசீர்வதித்து வர பெண்கள் தேவை. ஊழியத்தில் பயிற்சி பெறவும், அனுபவம் பெறவும் வாஞ்சையுள்ள இரட்சிக்கப்பட்ட பிள்ளைகள் உடனே தொடர்பு கொள்ளவும்.

## திசையன்விளை - கோடாவிளை சிறுவர் இல்லம்

கோடாவிளை கலிலேயா முகாம் நடைபெறும் காம்பவுண்டில் 6ம் வகுப்பிலிருந்து படிப்பவர்களுக்கு 2010 ஜூன் முதல் சிறுவர் இல்லம் நடத்த வாஞ்சித்து ஜெபித்து வருகிறோம். இவர்களை ஆவிக்குள் வழிநடத்த, பாடங்கள் சொல்லி கொடுக்க வார்டன் தேவை.

தொடர்பு : **திரு. இரத்தினம் ஆசிரியர்** – தொலைபேசி : **04637276306**
**திரு. மனோகர் ஆசிரியர்** – தொலைபேசி : **04637 272664**
மொபைல் : **94864 81522**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## துதி,கனம், மகிமை – இயேசுகிறிஸ்துவுக்கே!

**பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.**

## விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோதரி லிஸி, கன்னியாகுமரி.**

எனது மகளுக்கு ஆப்ரேஷன் நல்ல முறையில் முடிய வேண்டுமென ஜெபிக்க எழுதியிருந்தேன். கர்த்தருடைய கிருபையினால் ஆப்ரேஷன் வெற்றியாக முடிந்தது.

**சகோதரி அனிட்டா, தூத்துக்குடி.**

நீங்கள் கடிதத்தில் எழுதியிருந்த **'என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதைச் செய்வேன்'** என்ற வசனமும், **'சகலத்தையும் திருப்பிக் கொள்வாய்'** என்ற வசனமும் சோர்ந்து போன என் உள்ளத்திற்கு ஆறுதலை தந்தது. தேவனுக்கே மகிமை.

**சகோதரி தேவகிருபை, கரூர்.**

எனக்கு 9 ஆண்டுகளாக குழந்தை இல்லாமலிருந்தது. மிகவும் கவலையுடன் இருந்தேன். உங்களுக்கு ஜெபிக்கும்படி கடிதம் எழுதினேன். நீங்கள் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அழகான ஆண்குழந்தையை தந்தார்.

**சகோதரி ஜீவரேகா, நாகை.**

தங்களுடைய "100–கிராம ஊழியம்" மாதஇதழ் எனக்கு ஆசீர்வாதமாகவும், ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கு பிரயோஜனமாகவும் இருக்கிறது.

**சகோதரி வசந்தா, வேலூர்.**

"100–கிராம ஊழியம்" மாதஇதழ் வாசிக்கும்போது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. ஒவ்வொரு மாதமும் அனுப்பப்படுகிற கர்த்தருடைய வாக்குத்தத்தம் எனக்கு ஆறுதலாக இருக்கிறது.

## புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

**சகோ.அன்பழகன், வேலூர்.**

நான் உடற்கல்வித் துறையில் UG BPE என்கிற பட்டப்படிப்பு படிக்கிறேன். கடந்த ஆண்டில் நவம்பர் மாதம் 5வது செமஸ்டரில் வெற்றி பெற ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். நீங்கள் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு எல்லா தேர்வுகளிலும் வெற்றியை கட்டளையிட்டார்.

**சகோதரி அனித்தா ரோஸ்லின்.**

2010 மார்ச் மாத **"தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்"** பத்திரிக்கை எனக்கும், என் குடும்பத்திற்கும் வழி காட்டுதலாக அமைந்தது.

**சகோதரி குணவதி, விருதுநகர்.**

என் மகளின் பொதுத்தேர்விற்காக ஜெபித்துக் கொண்டிருந்தபோது, 2010 மார்ச் மாத பத்திரிக்கையில் **"கர்த்தர் உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக** ( சங். 20:4)" என்ற வாக்குத்தத்தம் வந்தது. அந்த வார்த்தை ஆலோசனைக்காக அலை மோதிக் கொண்டிருந்த என்னை கரை சேர்க்கும் மரக்கலம் போலிருந்தது.

**"100-கிராம ஊழியம்" பத்திரிகையை உங்கள் கிறிஸ்தவ நண்பர்களுக்கும், "தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்" பத்திரிகையை உங்கள் அருகிலுள்ள புறமத நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.**

## 2010 மார்ச் மாத இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை

கர்த்தருடைய கிருபையினால் 27.03.2010 அன்று திண்டுக்கல் மாவட்டம் – வடமதுரை யூனியனில் இயேசுவை விரும்புவோர் முகாம் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

வடமதுரை நல்ல சமாரியன் சபையில் பாஸ்டர் மகேந்திரன் அவர்கள் இந்த முகாமிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்திருந்தார்கள். முகாமில் கலந்துகொள்ளும்படி அழைப்புக்கடிதம் பெற்றுக்கொண்டவர்களில் இரண்டு பேர் மட்டும் ஆர்வமுடன் வந்து கலந்துகொண்டார்கள்.

இவர்களுக்கு மெய்யான கடவுள் இயேசு தான் என்பதை வேதத்தின் மூலம் விளக்கிக் கூறப்பட்டது. இயேசுவின் பிறப்பு, ஊழியம், சிலுவைப்பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல், இரண்டாம் வருகை பற்றி சொன்னபோது மிகவும் ஆர்வமுடன் கேட்டு தங்களை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தார்கள். பாஸ்டர் மகேந்திரன் அவர்கள் இவர்களுடைய இரட்சிப்பிற்காக ஜெபித்து புதிய ஏற்பாடும், மதியஉணவும் வழங்கினார்கள். **தேவனுக்கே மகிமை!**

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

நீ எழும்பி காரியத்தை நடப்பி; கர்த்தர் உன்னோடே இருப்பாராக. 1நாளா. 22:16

**நடு இரவு ஜெபம் - மறு நாள் துதி ஆராதனை**

| | |
|---|---|
| **நாள் : 30.04.2010** வெள்ளி | **நாள் : 01.05.2010** சனி |
| **நேரம் :** 7PM முதல்12Mid Night | **துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM |
| **இராப்போஜனம் :** இரவு 12மணி | **வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM |

**தேவசெய்தி / சிறப்பு ஜெபம்**

# பாஸ்டர் அந்தோணி,

**ஆத்துமநேசர், திருச்சி.**

**உபவாச ஜெபம்**

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை உபவாச ஜெபம் நடைபெறும்.
இதில் தலைமை அலுவலகத்திற்கு வரும் ஜெப விண்ணப்பங்களுக்காக விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்படும்.

**இடம்:** **TVGM தலைமை அலுவலகம்,**
**100 – கிராமம்,**
**திருச்சி – 620 102.**

## திருச்சி, TVGM தலைமை அலுவலக சேவைக்கு இரட்சிக்கப்பட்ட, ஆத்துமபாரமுள்ள, அர்ப்பணிப்புள்ள சகோதர, சகோதரிகள் தேவை!

1. Accountant - Tally அல்லது வேறு Accounts படித்து, Cash Book, Ledger, Statement போட்டு அனுபவமுள்ளவர்கள் குடும்பமாகவோ அல்லது தனிநபராகவோ நிரந்தர பணிக்கு தேவை. TVGM காம்பவுண்டுக்குள் வீடு இலவசமாக கொடுக்கப்படும்.
2. கம்பியூட்டரில் ஆங்கிலம், தமிழ் டைப் செய்யத் தெரிந்த முன் அனுபவமுள்ளவர்கள் கடிதத் தொடர்பு ஊழியத்திற்கு தேவை.
3. ருசியாக சமைக்க தெரிந்த முன் அனுபவமுள்ள அம்மா தேவை.
4. வீடியோ எடுக்கவும், Pinnacle- ல் எடிட் செய்யவும் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
5. சைக்கிள் ஓட்டத் தெரிந்த, தோட்ட வேலைகள் செய்ய ஆள் தேவை .
6. அலுவலக வேலைகளில் உதவி செய்யவும், அம்பாசிட்டர் கார் ஓட்டவும், லைசன்ஸ் உள்ள அனுபவமுள்ளவர் தேவை.
7. சிறுவர் இல்லத்தை பொறுப்புடன் நடத்த வார்டன் தேவை.

**விண்ணப்பப்படிவம் பெற ரூ.10/- மணியார்டர் செய்யவும்.**

**தொடர்பு முகவரி : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்,**
**தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்,**
**100-கிராமம், சோமரசம்பேட்டை, திருச்சி - 620 102.**
**போன் : 0431-2607241 செல்:94435 44628**

## 100-கிராம ஊழியம் செய்ய தன்னார்வத் தொண்டர்கள் தேவை!

மாதந்தோறும் 5 நாட்கள் ஆலயமில்லாத கிராமங்களில் இரண்டு இரண்டு பேராக நடந்து திரிந்து, கிராமங்களில் தங்கியிருந்து கிடைக்கிற இடத்தில் சாப்பிட்டுக் கொண்டு வீடுகள்தோறும் யோவான் சுவிசேஷப் புத்தகம் இலவசமாக கொடுத்து இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிக்கவும், தங்கள் சாட்சியை கிராம மக்களுக்கு அறிவிக்கவும் ஆண்கள், பெண்கள் தேவை. வீட்டிலிருந்து புறப்பட்டு மறுபடியும் வீடு வந்து சேரும் வரையிலும் பிரயாணப்படி குறைந்த கட்டணம் வழங்கப்படும்.

# THE AMBASSADOR SCHOOL OF LEARNING
## TASOL - திட்டத்தில் உங்கள் பங்கு?

TASOL என்பது **சகோ. ஸ்டீபன் கிறிஸ்டோபருக்கு** கர்த்தர் சிறுவயது முதல் கொடுத்த ஒரு **தரிசனம்** ஆகும். அதன் பிரதானமான நோக்கமானது, நம் தேசத்தில் கூடாரம் செய்பவர்களாக வேலை செய்யும் **உயர்நிலை கிறிஸ்தவ தலைவர்களை** ஏற்படுத்துவதாகும்.

இன்று பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் படித்து முன்னேறி **டாக்டர், பொறியாளர்** போன்ற உயர்பதவியில் வரவேண்டுமென விரும்புகின்றனர். பல கிறிஸ்தவர்களின் மனநிலை ஒரு வசதியான கட்டத்திற்குள் வேலை செய்வதிலேயே உள்ளது. பலருக்கு இந்த வசதி என்பது வெளிநாட்டில் வேலை செய்வதிலேயேயுள்ளது. ஆனால் நாம் வேதத்தில் வாசிப்பதுபோல் நெகேமியா, அரசனின் அதிகாரியாக இருக்கும்போது, எருசலேமின் மதில்களை மறுபடியும் கட்டுவதில் அக்கரையுள்ளவராயிருந்தது போல, நாமும் நமது நாட்டின் மேல் அக்கரை கொள்ள வேண்டும். நெகேமியா இந்த வசதியான கட்டத்திற்குள்ளேயே இருப்பதை தெரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் அவர் இந்த வசதியான கட்டத்தினின்று வெளியே வர விருப்பம் கொண்டு, எருசலேமின் மதில்களை கட்டினார். கர்த்தர் அவருக்கு வெற்றியை அருளினார்.

இந்த வேளையில் நாம் எங்கே உள்ளோம் ? பின்தங்கி உள்ளோமா ? மத்தேயு 9:17ல் **"அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்"** என்று இயேசு சொன்னார். ஆகவே நாம் கவனமாக அவரது இராஜ்யத்தின் கூடாரம் செய்வர்களாக ஏதாவது ஒரு விதத்தில் வேலை செய்ய, நமது உழைப்பை நாம் கொடுக்க வேண்டும்.

TASOL ன் நோக்கம் உயர்நிலை அதிகாரியாக வர ஆர்வமுள்ள **புத்திக்கூர்மையுள்ள** ஏழை எளிய பிள்ளைகளை பயிற்றுவித்து, பொருளாதார உதவி செய்து, நெகேமியாவைப் போல் **கிறிஸ்துவுக்கு சாட்சியாக நிலைநிறுத்துதல்** ஆகும்.

இந்த மகத்துவமான திட்டத்திற்காக முதல் கட்டமாக சில ஏக்கர் நிலம் வாங்க **விசுவாசத்தில்** திட்டமிட்டுள்ளோம். 2010 டிசம்பருக்குள் இந்த நிலத்திற்காக ரூ. 30 லட்சம் தவணை முறையில் செலுத்த வேண்டும்.

இந்த தரிசனத்திற்காக ஜெபியுங்கள். கர்த்தர் உங்கள் உள்ளத்தில் இதைக் குறித்ததான ஒரு பாரத்தை கொடுப்பாரானால், உங்கள் உயர்ந்த காணிக்கையினால் தாங்கும்படி அன்புடன் அழைக்கிறோம்.

**ரூபாய் 1 லட்சம் கொடுக்கக்கூடிய 30 பேர்கள் தேவை!**

**( அல்லது )**

**தங்களால் இயன்றதை கொடுக்கக்கூடியவர்கள் தேவை!**

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.**

**P.T.** கிறிஸ்டோபர், நிறுவனர் TVGM.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது". யாக். 5:16**

# தினசரி ஜெபக்குறிப்புகள்

***திங்கள்:*** TASOL Trust ஆனது 17.03.2010 அன்று பதிவு செய்யப்பட்டது. தேவனைத் துதியுங்கள்.

***செவ்வாய்:*** TASOL Trust க்கான நிலங்கள் மூன்றில் இரண்டு பகுதி வாங்க கர்த்தர் உதவி செய்தார். தேவாதி தேவனைத் துதியுங்கள்.

***புதன்:*** TASOL Trust நிலத்திற்கு தேவைப்பட்ட 30 லட்சம் ரூபாயில் 2 லட்சம் ரூபாய் மட்டுமே காணிக்கை வந்திருந் தாலும் மீதி பணங்களை REPCO Bank மற்றும் குடும்பத்தினர் உதவியினாலும் வாங்குவதற்கு கர்த்தர் உதவி செய்தார். இந்தப் பணத்தை தமக்குச் சித்தமான வர்கள் மூலம் ஏற்றக் காலத்தில் கர்த்தர் சந்திக்கும்படி ஜெபியுங்கள். இன்னும் வாங்கப்பட வேண்டிய மூன்றிலொரு பகுதி தேவையை கர்த்தர் அற்புதமாக சந்திக்கவும், பத்திரம் எழுதப்படவும் ஜெபியுங்கள்.

***வியாழன்:*** **THE AMBASSADOR SCHOOL OF LEARNING Trust** (கிறிஸ்தவ தலைமைத்துவ மையம்) எந்த நோக்கத்திற்காக தேவன் ஆரம்பிக்க சித்தம் கொண்டாரோ அந்த திட்டத்தை நிறைவேற்ற அநேக ஆலோசகர்கள், பொருளுதவியாளர்கள், ஜெபபங்கா ளர்கள், அரசாங்க ஆதரவுகள் யாவும் கர்த்தர் கிருபையாக அளிக்கும்படி ஜெபியுங்கள். சகலத்தையும் அதினதின் காலத்தில் கர்த்தர் நேர்த்தியாக செய்து வருவதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

***வெள்ளி:*** ஆலயமில்லாத கிராமங் களில் ஜெபவீடு கட்டுவதற்கும், குறை வேலைகளை முடிப்பதற்கும் மற்றும் ஜெப வீட்டுத் தேவைகளை சந்திக்கும் படி எங்களுக்கு வரும் விண்ணப் பங்கள், தொலைபேசிகள், ஈமெயில் யாவும் நாளுக்குநாள் அதிகப்பட்டுக் கொண்டே வருகின்றன. ஆனாலும் அதற்கு ஏற்ப பொருளாதார உதவி செய்யக்கூடியவர்கள் எங்களோடு தொடர்பு கொள்ளவில்லை. ஆதலால் எங்களிடம் உதவி கேட்பவர்க ளுக்கும் நாங்கள் நேரடியாக போய் பார்வையிட்ட ஊழியர்களுக்கும் பதில் சொல்லி முடியவில்லை. கர்த்தரே தமக்கு சித்தமான புதிய வாசல்களை திறக்கும்படி ஜெபியுங்கள்.

***சனி:*** நம்முடைய சிறுவர் இல்லம் இரண்டிற்குமே சோஷியல் டிபார்ட்மெண்ட் உத்தரவுப்படி கட்டிட வேலைகள் அதிக வசதியுடன் செய்ய வேண்டியுள்ளது. அதினுடைய பட்ஜெட் மிக மிக அதிகமாக உள்ளது. பல லட்சங்கள் இதற்கு தேவைப்படுகிறது. ஜெபியுங்கள்.

***ஞாயிறு :*** TVGM மேனேஜிங் டிரஸ்டி **சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபரின்** திருமணத்திற்காக தயவு செய்து உங்கள் குடும்ப ஜெபத்தில், கூட்டங்களில் ஜெபியுங்கள். அவர்கள் குடும்பமாக இணைந்து, ஒருமனதோடு தேவனுடைய நாமத்தை உயர்த்தும்படியாகவும், தேவ சித்தத்தை நிறைவேற்றி, தேவனுடைய இராஜ்யத்தைக் கட்டும்படியாக ஜெபியுங்கள். திருமண ஏற்பாடுகள் சகல மும் ஒழுங்கும், கிரமுமாக தேவசித்தப் படி அமைய ஜெபியுங்கள்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில்
தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரி.9:7

**TVGM தலைமை அலுவலக முகவரி**

100-கிராம ஊழியம், ஜெபவீடு, சிறுவர் இல்லம், ( காணிக்கைகள் )
பத்திரிக்கை சந்தா, ஜெபவிண்ணப்பம் & சகல தொடர்புகளுக்கும்:-


MR.STEPHEN CHRISTOPHER,
MANAGING DIRECTOR.
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
"100 - VILLAGE"
SOMARASAMPETTAI, ( HOSPITAL STOP )
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0- 431 - 2607241
FAX : 0- 431 - 2607446
CELL Bro.Stephen : 94871 92763
Bro.P.T Christopher : 94435 44628
Email : 100village@tvgm.org


*Website :*
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம்,
**'100 கிராம ஊழியம்'** அறிக்கை,
மாதாந்திர வாக்குத்தத்த செய்தி
மற்றும் முக்கிய நிகழ்ச்சிகள்
வெளியிடப்பட்டு வருகிறது.

டிராப்ட், செக், M.T. அனுப்பும்போது உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண், காணிக்கையின் நோக்கம் யாவையும் TVGM தலைமை அலுவலக முகவரிக்கு தபால் அல்லது எங்கள் Email: 100village@tvgm.org மூலம் தெரியப்படுத்தி உதவுங்கள்.

**கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக், போஸ்டல் ஆர்டர் அனுப்ப வேண்டிய முறை**

TAMIL VILLAGE GOSPEL MISSION (100-கிராம ஊழியம், ஜெபவீடு)
T.V.G.M. SOCIAL SERVICE ( 80G வரிவிலக்கு உண்டு)
( சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
T.V.G.M. PUBLICATION ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

( அல்லது )

MR. STEPHEN CHRISTOPHER,
SB 12491010 18538 CANARA BANK, Code : 1249 Puthur Branch, TRICHY.
இந்த கணக்கும் TVGM ஸ்தாபனத்திற்கே அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.


Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.
**Editor : Mr. Stephen Christopher**

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

**Return Requested**
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102. India.

**To**

இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது. ஆதி. 24:50

# திருமண அழைப்பிதழ்

நாள் : 28 . 05. 2010 வெள்ளி மாலை 5.00 மணி

இடம் : தூய ஜார்ஜ் கதீட்ரல் தேவாலயம்,
224, கதீட்ரல் ரோடு, சென்னை - 86.

**மணமக்கள் :**

**ஸ்டீபன் கிறிஸ்டோபர்** MSW. M.A.Missions ( U.S )

**பெர்சிஸ் ஹேமலதா** B.Tech.,

குடும்பமாக வந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி
தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

*P.T. Christopher* & *Jeyaseeli Christopher.*

மகன் *Peter Christopher* & மகள் *Christina*

**வரவேற்பு நிகழ்ச்சி I - திருச்சி**

நாள் : 30 . 05. 2010 ஞாயிறு மாலை 6.30

இடம் : ரோஸன் மஹால், மத்திய பேருந்து நிலையம், திருச்சி

**வரவேற்பு நிகழ்ச்சி II - நெல்லை**

நாள் : 05 . 06. 2010 சனி மாலை 6.30

இடம் : கலிலேயா காம்பவுண்ட்,கோடாவிளை, திசையன்விளை வழி

தொடர்பு : 0431- 2607241, 94435 44628, Email : ptc@tvgm.org

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011
HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி